[13th February 1959

National Water Supply Scheme

* 303 *Q*.—Sri T. VELUCHAMI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் **National Water Supply Scheme** என்ற பிரிவில் நெல்லை ஜில்லாவிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) இந்த ஸ்கீமின் அடிப்படையில் அம்பை, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலிய தாலூகாக்களில் பல கிராமங்களுக்கு வெளியே வெகுதூரத்தில் கக்கூஸ்களும் போரிங்-பைப்புக்களும் அமைக்கப்படுவதின் நோக்கம் என்ன ?

(இ) இந்த கக்கூஸ்களையும் போரிங் பைப்புக்களையும் மக்கள் உபயே படுத்துகின்றார்களா ? அல்லது உபயேகப்படுத்துவார்களா ?

(ஈ) இந்த ஸ்கீம் மக்களுக்கும் உபயோகமான ஸ்கீம்தானா ?

(உ) இந்த ஸ்கீமுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை **Local Development Works** ஸ்கீமுக்கு மாற்றுவதற்கு சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Rs. 5·5 lakhs, Sir.

(*b*) Bore-wells and individual latrines are provided near habitations; but community latrines are put up a little away to prevent the spread of infection.

(*c*) The villagers are gradually getting accustomed to the bore-wells and latrines.

(*d*) Yes, Sir.

(*e*) No, Sir.

Sri M. S. SELVARAJAN : சார், இந்த திட்டத்தில் என்ன என்ன கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று பல வருஷங்களுக்கு முன்பு ஒரு லிஸ்ட் தயாரிக்கப்பட்டது. சில தாலுக்காகளில் கிளாரிங்காக விடப்பட்டிருக்கின்றனவா ? அப்படியானால் அதைப் பரிசீலனை செய்து அப்படி விடப்பட்டிருப்பவைகளைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தத் திட்டத்தின் கருத்து ஆறு ஒரமாக இருக்கும் கிராமங்களுக்கு கிடைக்கவேண்டும் என்பது. அதனால் ஆற்றோரமாக இல்லாத கிராமங்களை எடுத்துக்கொள்ளாமல் விட்டிருக்கலாம்.

Sri V. SUBBIAH : இந்த திட்டத்தை எல். டி. ஒர்க்ஸ் ஸ்கீக்கு மாற்றினால் நலமாக இருக்குமென்று மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த இரண்டு திட்டங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் கேட்கிறார்கள்.

நாஷனல் வாடர் சப்ளை ஸ்கீமில் பொது மக்கள் ஐந்து சதவிகிதமும் எஸ். டி. ஸ்கீமில் 50 சதமும் கொடுக்கிறார்கள். எல்லோரும் இந்தத் திட்டத்தை வேண்டுமென்று கேட்கிறார்கள்.

Rural Water Supply Scheme

* 304 *Q*—Sri T. VELUCHAMI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கிராமாந்திர தண்ணீர் சப்ளைத் திட்டத்தின் கீழ் கிணறு வெட்டுவதற்கு முன்பு எத்தனை பிரேரேபிக்கப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இதுவரை பரிசோதனைக்காக **Water analyst** க்கு அனுப்பப்பட்டது.